10 SEP 2020

**சுருக்கம்**

**பணியமைப்பு - ஓய்வூதிய இயக்ககம் - திரு.வ.ஜெயக்குமார், இளநிலை உதவியாளர், ஓய்வூதிய இயக்ககம், சென்னை - கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 15 மற்றும் 20(6)(b) ஆகியவற்றை தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.**

---

**நிதி(ஓய்வூதியம்)த் துறை**

**அரசாணை (3ப) எண்.13** **நாள்.02.09.2020.**
**சார்வரி, ஆவணி- 17**
**திருவள்ளுவர் ஆண்டு 2051.**

**படிக்க**

1. **அரசாணை (நிலை) எண்.123, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்: 08.05.2017.**
2. **ஓய்வூதிய இயக்குநரகம் கடித நக.எண்.10400/2017/அ2/ நாள்.23.07.2018**
3. **அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம)வே.வா. துறை, நாள்.23.01.2020**

-oOo-

**ஆணை:**

பார்வை இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஓய்வூதிய இயக்குநரின் கடிதத்தில், திரு.டி.வி.வரதராஜன் ஓய்வூதிய இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது 06.05.2004 அன்று பணிக்கு வராமல் காணாமல் போனதை தொடர்ந்து, எட்டு ஆண்டுகளாக அறியப்படாததால், சட்டத்தின் பார்வையில் இறந்ததாக கருதப்பட்டு சட்ட இழப்பு மரணம் அடைந்ததாக நீதிமன்ற ஆணை வாயிலாக விளிம்புகை செய்யப்பட்டுள்ளதால், திரு.டி.வி.வரதராஜன். இளநிலை உதவியாளர் அவர்களின் வாரிசுதாரரான மகன் திரு.வ.ஜெயக்குமார், அவர்களுக்கு கருணை அடிப்படையில் ஓய்வூதிய இயக்ககத்தில் இளநிலை உதவியாளராக மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 29.05.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனியர், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதோடு கூடுதலாக பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று, B.B.M. , இளங்கலை பட்டம் பெற்றுள்ளார். தனியர் பணியேற்பு செய்யும் நாளில் 21 வயதை நிறைவு செய்துள்ளதாகவும், 28.05.2018 அன்று ஓராண்டு பணியை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார் என்றும் சான்றளிக்கப்படுவதன் அடிப்படையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2017 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு ஓய்வூதிய இயக்குநர் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020-ன்படி காணாமல் போன அரசு ஊழியர் நீதிமன்ற ஆணை

த.பி.பா.

வாயிலாக இறந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர் அவரது வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15-ல் வழிவகை செய்யப்படவில்லை. மேலும், விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டு மூன்றாண்டுகள் கடந்த நிலையில் அளிக்கப்பட்டுள்ளதால் மேற்காணும் சட்டப்பிரிவுகள் 15 மற்றும் 20(6)(b) ஐயும் தளர்வு செய்திட வேண்டும்.

3. ஓய்வூதிய இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, ஓய்வூதிய இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு.வ.ஜெயக்குமார், இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணி நியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும் அப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 15 மற்றும் 20(6)(b)-ஐயும், மேலும், நியமனநாள் முதல் பணப்பலன்களுடன் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)-ஐயும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தனியர் பொருட்டு தளர்வு செய்து தனியர் பணியேற்ற நாளான 29.05.2017 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. மேலும், 29.05.2017 முற்பகல் முதல் தனியரின் பணி வரன்முறை செய்யப்படுவதால் பணிவிதிகளுக்குட்பட்டு ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவற்றை விதிகளின்படி, பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.கு.எண்.7454/க்யு1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு. எண்.17918/ஜி2/2020 இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பூஜா குல்கர்னி
சிறப்பு செயலாளர்

பெறுநர்
கூடுதல் செயலர்/ இயக்குநர்,
ஓய்வூதிய இயக்குநரகம், 3-வது தளம், ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலகங்கள் கட்டடம், 571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை-35
திரு.வ.ஜெயக்குமார், இளநிலை உதவியாளர், ஓய்வூதிய இயக்குநரகம், சென்னை -35. (துறைத் தலைவர் வழியாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை -9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்

-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்

ஓய்வூதிய இயக்ககம்,
சென்னை–35.

மே.கு.ந.க.10400/2017/அ2

நாள்: 15.09.2020

(அரசாணை 3(ப) எண்.13 நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்:02/09/2020)

அனுப்பலாகிறது.

---

JOINT DIRECTOR
இணை இயக்குநர்
DIRECTORATE OF PENSION
CHENNAI-600 035.
15/9/2020

பெறுநர்
திரு.வ.ஜெயக்குமார்,
இளநிலை உதவியாளர்,
ஓய்வூதிய இயக்ககம்,
சென்னை – 35.